PRIMARY SCHOOL

SECOND SEMESTRAL ASSESSMENT - 2013

TAMIL LANGUAGE - PAPER 2

PRIMARY 4

NAME : ______________________________ (    )

CLASS : P (    )

DATE :

# TAMIL LANGUAGE

## PAPER 2

Total Time : 1 hour 15 minutes

| MARKS SCORED | |
|---|---|
| TOTAL | / 45 |

______________________
Parent's Signature / Date

**INSTRUCTIONS TO CANDIDATES**

Do not open this booklet until you are told to do so

Follow all instructions carefully.

Answer all questions.


தொடக்கப்பள்ளி
தொடக்கநிலை 4
தேர்வு - தமிழ்மொழி
கட்டுரை

COMPOSITION

நேரம்: 40 நிமிடங்கள்

மதிப்பெண்கள்: /20

கீழ்காணும் படங்களைப் பார்த்து 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் உதவிச் சொற்களை கட்டுரை எழுத பயன்படுத்திக்கொள்ளலாம்.




| | |
|---|---|
| தாமதமாக | மன்னிப்பு |
| பேருந்து | இடைவேளை |
| சாலையோரத்தில் | பசியாக |
| துரத்திக்கொண்டு | சட்டைப்பையினுள் |
| திட்டினார் | மறந்துவிட்டேன் |

வேற்றுமை

கீழ்க்காணும் பத்தியில் கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகச் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது (4 மதிப்பெண்கள்)

செல்வனும் பாத்திபனும் உறவினர்கள். அவர்கள் ஒரே பள்ளியில் படிக்கிறார்கள். மார்ச் பள்ளி விடுமுறை வந்தது. (Q1) ___(____)_____இரண்டாவது வாரம் செல்வனின் தங்கைக்கு மூன்றாவது பிறந்த நாள் வந்தது. செல்வனின் குடும்பத்தார் ஒரு சிறிய (Q2) ___(____)____ஏற்பாடு செய்தனர். அவ்விருந்தில் கலந்துகொள்ள அவர்கள் பாத்திபனின் ( Q3) ____(      )_____ அழைத்தனர். அவர்கள் அனைவரும் விருந்தில் கலந்துகொண்டனர். விருந்து முடிந்ததும் பாத்திபனும்

(Q4) _____(      )______ஆறு வயது தம்பியும் செல்வனின் வீட்டில் இரண்டு நாள்கள் தங்க விரும்பினார்கள். அவர்கள் தங்கள் விருப்பத்தைப் பெற்றோரிடம் தெரிவித்தனர். அவர்களும் சம்மதித்தனர். பிள்ளைகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

Q1. (1) விடுமுறையால்
(2) விடுமுறையின்
(3) விடுமுறையில்
(4) விடுமுறையை

( )

Q2. (1) விருந்துக்கு
(2) விருந்தோடு
(3) விருந்திலிருந்து
(4) விருந்தில்

( )

Q3. (1) குடும்பத்தினரால்
(2) குடும்பத்தினர்
(3) குடும்பத்தினருக்கு
(4) குடும்பத்தினரை ( )

Q4 (1) அவன்
(2) அவனுக்கு
(3) அவனுடைய
(4) அவனோடு ( )

செய்யுள் / பழமொழி

கீழ்க்காணும் செய்யுளை / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (5 மதிப்பெண்கள்)

5. உண்டிக்கு அழகு __________ உண்டல்.

(1) விருந்தோடு
(2) மருந்தோடு
(3) உணவோடு
(4) அளவோடு

( )

6. __________ நண்பனை ஆபத்தில் அறியலாம்.

(1) உண்மையான
(2) அன்பான
(3) நேர்மையான
(4) பாசமான

( )

7. மந்திரிக்கு அழகு வரும்பொருள் __________.

(1) பார்த்தல்
(2) வாங்குதல்
(3) உரைத்தல்
(4) மறைத்தல்

( )

8. __________ அறியாமல் காலை விடாதே.

(1) ஆழம்
(2) நேரம்
(3) உயரம்
(4) காலம்

( )

9. அளவுக்கு மிஞ்சினால் __________ நஞ்சு.

(1) உணவும்
(2) தேனும்
(3) பாலும்
(4) அமுதமும்

( )

ஒலி வேறுபாடு

கீழ்க்காணும் வாக்கியங்களை நிரப்புவதற்கு ஏற்ற சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுது.

10. பாம்பைக் கண்ட சிறுவன் ______________ கொண்டான்.

( கிலி , கிழி )

11. ______________ தெரியாமல் வாடகை உந்துவண்டி ஓட்டுனர் தடுமாறினார்.

( வலி , வழி )

12. மீன் ______________ சுவையாக இருந்தது.

( குளம்பு , குழம்பு )

13. பொருள்களின் ______________ தாங்காமல் பை பிய்ந்து போனது.

( கனம் , கணம் )

14. நாய் ______________ ஒலி தெருமுனை வரை கேட்கிறது.

( குரைக்கும் , குறைக்கும் )

## முன்னுணர்வுக் கருத்தறிதல்

கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகச் சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து, கோட்டில் எழுது. (5 மதிப்பெண்கள்)

சுமதியும் அவளது குடும்பத்தினரும் செந்தோசாவுக்குப் போயிருந்தனர். அங்கே அவர்கள் தந்தையர் தின 15. ____________________ கலந்துகொண்டனர். அவர்கள் காலை எட்டு மணிக்குக் கடற்கரையை அடைந்தனர். அங்கே பல இந்தியக் குடும்பங்களைப் பார்த்தார்கள். சுமதியின் அப்பாவும் அண்ணனும் படகோட்டும் 16. ____________________ கலந்துகொண்டார்கள். அதில் அவர்களுக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. மதிய 17. ____________________ பிறகு, அவர்கள் மணல்வீடு கட்டும் போட்டியில் கலந்துகொண்டார்கள். அதில் அவர்களுக்கு முதல் பரிசு கிடைத்தது. அது மட்டுமா? சுமதியின் அப்பாவுக்கு நூறு வெள்ளி 18. ____________________ பரிசாகக் கிடைத்தது. அவர்கள் அன்றைய பொழுதை மிக ஆனந்தமாக 19. ____________________. மாலையில் அவர்கள் பல இனிய நினைவுகளுடன் வீடு திரும்பினர்.

| | | |
|---|---|---|
| பற்றுச்சீட்டு | உணவுக்கு | சென்றனர் |
| சந்தையில் | போட்டியில் | விருது |
| கொண்டாட்டத்தில் | கடைக்கு | கழித்தனர் |

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் ( 5 மதிப்பெண்)


பின் வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி

# தெக்வாய் சமூக நிலையத்தின் பத்தாண்டு நிறைவு விழா

- ❋ விழாவை முன்னிட்டு இந்திய நற்பணிக்குழு போட்டிகளை ஏற்பாடு செய்துள்ளது.
- ❋ அனைவரும் போட்டிகளில் பங்கெடுக்க வாருங்கள்!

*நாள் : 27 ஜனவரி*
*இடம் : தெக்வாய் சமூக நிலையம்*

காலை 9 மணி முதல் 12 மணிவரை




**6 முதல் 7 வயது சிறுவர்களுக்கான ஓவியம் வரையும் போட்டி**



8 முதல் 10 வயது சிறுவர்களுக்கான பாடல் போட்டி

பிற்பகல் 2 மணி முதல் 5 மணிவரை



## இளைஞர்களுக்கான குழு நடனப்போட்டி

பதிவு செய்ய வேண்டிய
இறுதி நாள் *20 ஜனவரி 2009*

*அனைவரும் வாருங்கள்!*
*நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழுங்கள்!*

28 முதல் 30 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

20. எந்தத் தேதிக்குள் போட்டிக்குப் பதிவு செய்யவேண்டும்?

1) 10ம் தேதி
2) 20ம் தேதி
3) 27ம் தேதி
( )

21. 9 வயது சிறுவன் எந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம்?

1) ஆடல் போட்டி
2) பாடல் போட்டி
3) ஓவியம் வரையும் போட்டி
( )

22. யார் இந்தப் போட்டிகளை ஏற்பாடு செய்துள்ளார்கள்?

1) தெக்வாயில் இருப்பவர்கள்
2) சமூக நிலையத்தினர்
3) இந்திய நற்பணிக்குழுவினர்
( )

**4.**தெரிவுவிடைக் கருத்தறிதல்.

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

ஓர் ஊரில் ஏழை ஒருவன் இருந்தான். அவன் பெயர் செல்வம். அவன் கூலி வேலை செய்து காலத்தைக் கழித்தான். பணம் சம்பாதித்து பெரும் பணக்காரனாக வேண்டும் என்பது அவனுடைய ஆசை. அதனால் வேறு ஓர் ஊருக்குக் கிளம்பினான்.

ஒரு நாள் செல்வம் காட்டு வழியே நடந்து சென்று கொண்டிருந்தான். வழியில் அழுக்கு படிந்த ஒரு சிறு மூட்டையைக் கண்டான். அவன் அதை எடுத்து, பிரித்து, மேலோட்டமாகப் பார்த்தான். வெறும் பழைய துணிகளே கண்களுக்குத் தென்பட்டன. அந்தத் துணி மூட்டை தனக்கு ஒரு தலையணையாகப் பயன்படும் என்று நினைத்து, அதைத் தன்னுடனே வைத்துக் கொண்டான். அதை ஒரு முறை கூட அவன் முழுமையாகப் பிரித்துப் பார்த்ததில்லை. பார்க்க வேண்டும் என்ற எண்ணமும் அவனுக்குத் தோன்றவில்லை. வெறும் தலையணையாகவே அதைப் பயன்படுத்தி வந்தான்.

ஒருமுறை நோய் அவனைக் கடுமையாகத் தாக்கியது . நோயிலிருந்து பிழைத்து எழ முடியும் என்ற நம்பிக்கையே அவனுக்குப் போய்விட்டது. தன் வாழ்நாளில் பணக்காரனாக வாழாமலேயே போய்விடுவோமோ என்று எண்ணி ஆத்திரமும் ஆவேசமும் அடைந்தான். அப்பொழுது அவனுடைய கண்ணில் அந்த அழுக்குத் துணி மூட்டை பட்டது. அவன் அதை எடுத்து கிழித்து எறிந்தான். அதிலிருந்து தங்க நாணயம் சிதறி ஓடியது. அதைப் பார்த்தவாரே கண்ணை மூடினான்.

பின்வரும் வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் ஏற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுதுக. **(10 மதிப்பெண்கள்)**

Q23 செல்வத்தின் விருப்பம் என்ன?

1. பணம் சம்பாதிக்க வேண்டும் என்பது
2. பணம் செலவழிக்க வேண்டும் என்பது
3. பணம் சேமிக்க வேண்டும் என்பது
4. பணத்தை வைத்து வீடு வாங்க வேண்டும் என்பது ( )

Q24. செல்வன் ஏன் காட்டுப் பாதையில் நடந்து சென்றான்?

1. புதையலைத் தேட
2. மூட்டையைக் கண்டுபிடிக்க
3. வேட்டையாட
4. வேறு ஊருக்குப் போக

( )

Q25 அவன் ஏன் மூட்டையை முற்றிலும் திறந்து பார்க்கவில்லை ?

1. அது அசுத்தமாக இருந்ததால்
2. அதில் கிழிந்த பழைய ஆடைகள் மட்டும் தென்பட்டதால்
3. அதைத் தலையணையாகப் பயன்படுத்த விரும்பியதால் ( )
4. அதைப் பிரித்து பார்க்க வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை என்பதால்

Q26 அவனுக்கு ஏன் நோயிலிருந்து பிழைப்போம் என்ற எண்ணம் தோன்றவில்லை?

1. நோய் உடல் எங்கும் பரவி விட்டதால்
2. வாழ்க்கையின் இறுதி கட்டடத்தை அடைந்து விட்டதால்
3. பல நாட்கள் படுத்தப் படுக்கையாக இருந்ததால்
4. நோய் கடுமையாக இருந்ததால். ( )

Q27. செல்வன் இறக்கும் தருவாயில் எதை பார்த்தவாறு இறந்தான்?

1. தங்க நாணயத்தைப் பார்த்தவாறு இறந்தான்.
2. கிழிந்த துணியைப் பார்த்தவாறு இறந்தான்.
3. நாணயங்களைப் பார்த்தவாறு இறந்தான்.
4. பழைய துணியைப் பிடித்தவாறு இறந்தான். ( )

**5. சுயவிடைக் கருத்தறிதல்.**

**பின் வரும் கதையைக் கவனமாகப் படி. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

சந்தனம் என்பவன் மண்வெட்டும் தொழிலாளி. அவன், முகிலனின் வீட்டில் கிணறு வெட்டுவதற்கு ஒப்புக் கொண்டான். காலையிலிருந்து மாலை வரை வேலை செய்தான். மறுநாள் காலையில் மீண்டும் வேலைக்கு வந்தான். கிணற்றில் மண் சரிந்து மூடியிருப்பதைக் கண்டான். அவன் முயற்சி எல்லாம் வீண் போனதை உணர்ந்தான். சிறிது நேரம் வருத்தத்துடன் யோசிக்கலானான். பிறகு அவனுடைய ஆடைகளையும் காலணிகளையும் கிணற்றின் பக்கத்தில் வைத்து விட்டுத் தன் இல்லம் சென்றான்.

அதற்கிடையில் முகிலன் தோட்டத்தில் கிணறு எவ்வளவு ஆழம் தோண்டப்பட்டுள்ளது என்பதை அறிய அங்கு வந்தான். கிணறு மண்ணால் மூடியிருப்பதையும் கிணற்றின் பக்கத்தில் துணிகளையும் காலணிகளையும் கண்டான். சந்தனம், அம்மண்ணில் சிக்கியிருக்கலாம் என்று எண்ணி திடுக்கிட்டான். உடனே அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை அழைத்து வந்தான்.

எல்லோரும் புதைந்திருந்த மண்ணை அள்ளினர். மண்ணெல்லாம் அள்ளி முடிந்ததும் அங்கு சந்தனம் வந்து சேர்ந்தான். எல்லோரும் அவனைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தனர். அவன் அவர்களைப் பார்த்து,"காலையில் நான் இங்கு வந்த போது கிணற்றினுள் மண் சரிந்திருப்பதைப் பார்த்ததும் எனக்குத் தலை வலி வந்து விட்டது. அதனால் ஓய்வு எடுக்கச் சென்றேன். மண்ணை எல்லாம் அள்ளி உதவியதற்கு நன்றி," என்று கூறிவிட்டு வேலையைத் தொடங்கினான். எல்லோரும் வாயடைத்து நின்றனர்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையை எழுதுக.
**(9 மதிப்பெண்கள்)**

Q28. சந்தனம் என்ன செய்வதாக ஒப்புக்கொண்டான்?

Q29. அவன் எவ்வளவு நேரம் வேலை செய்தான்?

Q30. சந்தனம் வருத்தம் அடைய எது காரணமாக இருந்தது?

Q31. அங்கு கூடி இருந்தவர்கள் ஏன் சந்தனத்தைக் கண்டு ஆச்சரியம் அடைந்தனர்.? (2)

____________________________________________

____________________________________________

____________________________________________

Q32. எல்லோரும் வாயடைத்து நிற்க காரணம் என்ன ? (2)

____________________________________________

____________________________________________

____________________________________________

சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

Q15 முதல் Q18 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.

Q33. வருத்தத்துடன் -

1. சினத்துடன்
2. எரிச்சலுடன்
3. குழப்பத்துடன்
4. கவலையுடன் ( )

Q34. ஆச்சரியம் -

1. மயக்கம்
2. தயக்கம்
3. அச்சம்
4. வியப்பு ( )

விடைகள் - புள்ளிமான் ஒன்று ( Primary 4 - SA 2 2013 )

P4
TESTPAPER 11

1. (2) 2. (1) 3. (4) 4. (3) 5. (1) 6. (2) 7. (3) 8. (1) 9. (4)

10. கிலி 11. வழி 12. குழம்பு 13. கனம் 14. குரைக்கும்

15. கொண்டாட்டத்தில் 16. போட்டியில் 17. உணவுக்கு 18. பற்றுச்சீட்டு
19. கழித்தனர் 20. (3) 21. (2) 22. (3)

23. (1) 24. (4) 25. (4) 26. (4) 27. (1)

28. சந்தனம் முகிலனின் வீட்டில் கிணறு வெட்டுவதற்கு ஒப்புக் கொண்டான்.

29. அவன் காலையிலிருந்து மாலை வரை வேலை செய்தான்.

30. கிணற்றில் மண் சரிந்து மூடியிருந்ததால் சந்தனத்தின் முயற்சி எல்லாம் வீண் போனது. இதுதான் சந்தனம் வருத்தம் அயை காரணமாக இருந்தது.

31. சந்தனம் மண்ணில் சிக்கி இருந்ததாக அனைவரும் நினைத்ததால் அங்குக் கூடி இருந்தவர்கள் சந்தனத்தைக் கண்டு ஆச்சரியம் அடைந்தனர்.

32. சந்தனம் செய்ய வேண்டிய வேலையை அவர்கள் செய்து முடித்ததை அறிந்து கொண்டதே எல்லோரும் வாயடைத்து நிற்கக் காரணம் ஆகும்.